வகுப்பு / பாடம்	10 ம் வகுப்பு அறிவியல் - ஒளியியல்	அலகு	2
வினா வகை	சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.	மதிப்பெண்	10

1. A, B, C, D என்ற நான்கு பொருள்களின் ஒளிவிலகல் எண்கள் முறையே 1.31, 1.43, 1.33, 2.4 எனில் இவற்றில் ஒளியன் திசைவேகம் பெருமமாக உள்ள பொருள் எது?

அ) A ஆ) B இ) C ஈ) D

2. பொருளின் அளவிற்கு சமமான தலைகீழான மெய்பிம்பம் கிடைக்க பொருள் வைக்கப்பட வேண்டிய தொலைவு

அ) f ஆ) ஈறில்லாத் தொலைவு இ) 2f ஈ) f க்கும் 2f க்கும் இடையில்

3. மின் விளக்கு ஒன்று குவிலென்சு ஒன்றின் முதன்மைக் குவியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின் விளக்கு ஒளிவூட்டப்படும் போது , குவிலென்சானது

அ) விரிக்கும் கற்றைகளை உருவாக்கும் ஆ) குவிக்கும் கற்றைகளை உருவாக்கும்

இ) இணைக்கற்றைகளை உருவாக்கும் ஈ) நிறக்கற்றைகளை உருவாக்கும்.

4. குவிலென்சுன் உருப்பெருக்கமானது எப்போதும் -------- மதிப்புடையது

அ) நேர்க்குறி ஆ) எதிர்குறி இ) நேர்க்குறி (அ) எதிர்குறி ஈ) சுழி

5. ஒரு குவிலென்சானது, மிகச் சிறிய மெய்பிம்பத்தை முதன்மைக் குவியத்தில் உருவாக்கினால் பொருள் வைக்கப்படும் இடம் ------

அ) முதன்மைக் குவியம் ஆ) ஈறிலாத் தொலைவு

இ) 2f ஈ) f க்கும் 2f க்கும் இடையில்

6. ஒரு லென்சின் திறன் – 4 D எனில் அதன் குவியத் தொலைவு

அ) 4 மீ ஆ) -40 மீ இ) -0. 25 மீ ஈ) -2.5 மீ

7. கிட்டபார்வை குறைபாடு உடைய கண்ணில் பொருளின் பிமபமானது ----- தோன்றுவிக்கப்படுகிறது.

அ) விழித்திரைக்கு பின்புறம் ஆ) விழித்திரைக்கு மீது

இ) விழித்திரைக்கு முன்பாக ஈ) குருட்டுத் தானத்தில்

8. விழிஏற்பமைவுத் திறன் குறைபாட்டைச் சரி செய்ய உதவுவது

அ) குவிலென்சு ஆ) குழிலென்சு இ) குவி ஆடி ஈ) இரு குவிய லென்சு

9. சொல் அகராதியில் உள்ள சிறிய எழுத்துக்களைப் படிப்பதற்கு உகந்த லென்சு எது ?

அ) 5 செ.மீ குவியதுரம் கொண்ட குவிலென்சு ஆ) 5 செ.மீ குவியதூரம் கொண்ட குழிலென்சு

இ) 10 செ.மீ குவியதூரம் கொண்ட குவிலென்சு ஈ) 10 செ.மீ குவியதூரம் கொண்ட குழிலென்சு

10. ஒரு முப்பட்டகத்தின் வழியே செல்லும் , நீலம் , பச்சை மற்றும் சிவப்பு நிறங்களின் திசை வேகங்கள் V_B V_G V_R எனில் பின்வருவனவற்றுள் எச்சமன்பாடு சரியானது?

அ) $V_B = V_G = V_R$ ஆ) $V_B > V_G > V_R$ இ) $V_B < V_G < V_R$ ஈ) $V_B < V_G > V_R$

ஆக்கம் செ.பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் , அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்.

LIVEWORKSHEETS